

# தி.மு.க. இளைஞர் அணி

## மாவட்ட - மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின் பேரில், 2026 சட்டமன்றத் தேர்தல் பிரச்சாரத்திற்கு முன்கள வீரர்களாக இளைஞர் அணியினர் செயலாற்றும் வகையில், மாவட்ட – மாநகர – ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் கலந்துகொள்ளும் ஆலோசனைக் கூட்டங்களை நடத்தவுள்ளோம். மார்ச் 24, மற்றும் 25 ஆகிய தேதிகளில் மேற்கு மற்றும் தெற்கு மண்டலங்களில் நடைபெற உள்ள இந்தக்கூட்டங்களில் சம்மந்தப்பட்ட மாவட்ட – மாநகர – ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஆலோசனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு:–

**24.3.2026 செவ்வாய்க்கிழமை**

| | | |
|---|---|---|
| காலை 10.00 மணி | தேனி, திண்டுக்கல் மாவட்ட - மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் | பி.எஸ்.என்.ஏ.மஹால், ரவுண்ட் ரோடு, திண்டுக்கல். |
| மாலை 3.00 மணி | மதுரை, விருதுநகர் மாவட்ட - மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் | ஐடா ஸ்கட்டர் அரங்கம், சிந்தாமணி, மதுரை. |
| மாலை 6.00 மணி | இராமநாதபுரம், சிவகங்கை மாவட்ட - ஒன்றிய - நகர - பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் | ராஹா பேலஸ், கீழகண்டனி, மானாமதுரை சாலை, சிவகங்கை. |

**25.3.2026 புதன்கிழமை**

| | | |
|---|---|---|
| காலை 10.00 மணி | திருநெல்வேலி - கன்னியாகுமரி மாவட்ட - மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் | மூன் மஹால், என்.ஜி.ஓ. குடியிருப்பு, பாளையங்கோட்டை. |
| மாலை 3.00 மணி | தூத்துக்குடி - தென்காசி மாவட்ட - மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் | ஸ்ரீ நவீரா பேலஸ், கோவில்பட்டி. |

அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 21.3.2026

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

முதல்வர் மு.க.ஸ்டாலினின் ஆட்சியில் கால்நூற்றாண்டுகால கோரிக்கை நிறைவேறியது!

# வைகை மற்றும் கிருதுமால் நதிகளின் குறுக்கே உயர்மட்டப் பாலங்கள்!

## 25 –க்கும் மேற்பட்ட கிராம மக்கள் நன்றி!

திருப்புவனம் , மார்ச் 24 – வைகை ஆறு மற்றும் கிருதுமால் நதி குறுக்கே உயர் மட்ட பாலம் கட்டப்பட்டதால் 25 கிராம மக்கள் தமிழக அரசுக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

திருப்புவனம் சுற்று வட்டார கிராம பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையாக இருந்து வந்த லாடனேந்தல், பெத்தானேந்தல் இடையே வைகை ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலமும், பழையனூர், ஓடாத்தூர் இடையே கிருதுமால் நதியின் குறுக்கே உயர் மட்ட பாலம் கட்ட வேண்டும் என்பதும் கோரிக்கையாக இருந்து வந்தது. தமிழக அரசின் முயற்சியால் நான்கு ஆண்டுகளில் இரண்டு பாலங்களும் கட்டப்பட்டு மக்கள் மகிழ்ச்சியுடன் பயன்படுத்தி வருகின்றனர்.

பெத்தானேந்தல், மணல்மேடு கிராம மக்கள் லாடனேந்தல் பெத்தானேந்தல் இடையே வைகை ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் வேண்டும் என நீண்ட காலமாக வலியுறுத்தி வந்தனர். தமிழக அரசின் நடவடிக்கையால் ரூ.16.92 கோடி மதிப்பீட்டில் நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

374 மீட்டர் நீளம் 9.95 மீட்டர் அகலம் 19 தூண்களுடன் உயர்மட்டப் பாலம் கட்டப்பட்டுள்ளது. இந்த பாலம் கட்டப்பட்டுள்ளதால் லாடனேந்தல், பெத்தானேந்தல் மணல்மேடு, கணக்கன்குடி, ஏனாதி, சடங்கி, கருங்குளம், பாப்பாகுடி உட்பட 10க்கும் மேற்பட்ட கிராம மக்கள் பயனடைந்து வருகின்றனர்.

வைகை ஆற்றில் தண்ணீர் வரும் காலங்களில் 10 கி.மீ சுற்றி திருப்புவனம் வரவேண்டிய நிலையில் தற்போது இந்தப் பாலம் கட்டப்பட்டதால் 2 கி.மீ பயணித்தால் பள்ளி, கல்லூரி மாணவர்கள், மதுரைக்கு வேலைக்குச் செல்வோர் பயனடைந்து வருகின்றனர். 10 கிராம மக்களும் தமிழக அரசுக்கு நன்றி தெரிவித்து வருகின்றனர்.

அதேபோல பழையனூர் ஓடாத்தூர் இடையே செல்லும் கிருதுமால் நதியில் தண்ணீர் ஓடும் காலங்களில் மக்கள் ஆற்றை கடக்க முடியாது. பள்ளி, கல்லூரிக்கு செல்லும் மாணவர்கள் 20 கிமீ சுற்றித்தான் பழையனூருக்கு வர முடியும். கால் நூற்றாண்டு காலமாக அப்பகுதி மக்கள் கோரிக்கையுடன் போராடி வந்தனர்.

பழையனூர் வல்லாரேந்தல் இடைய கிருதுமால் நதியின் குறுக்கே உயர் மட்டப் பாலம் கட்டியதால் 12கிராமங்கள் பயனடைகின்றன. கிருதுமால் நதியில் செப்டம்பர் மாதம் முதல் ஜனவரி மாதம் வரை தொடர்ந்து தண்ணீர் செல்லும்.

இதனால் சிவகங்கை மாவட்ட எல்லையிலுள்ள பழையனூரையும், விருதுநகர் மாவட்ட கிராமங்களுக்கும் இடையே கிருதுமால் நதி வருடத்தில் மழை காலங்களில் நதியை கடந்து செல்லும் வல்லாரேந்தல் ஓடாத்தூர், சிறுவனூர், எஸ்.வாகைகுளம், சேந்தநதி, முக்குளம் உள்ளிட்ட 12க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு போக்குவரத்து துண்டிப்பால் பஸ்கள் வராது.

ஆற்றின் கரையின் இருபுறமும் ஷேர் ஆட்டோக்கள் இயக்கப்படும் நிலை உள்ளது.

உயர்மட்டப்பாலம் கட்ட வேண்டும் என்பது இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்தது. தமிழக அரசு உயர்மட்ட பாலம் கட்ட உத்தரவிட்ட நிலையில், உடனடியாக தமிழ்நாடு நெடுஞ்சாலை துறை நபார்டு கிராமச்சாலை திட்டத்தில் 3 கோடியே 57 லட்சத்து 53 ஆயிரம் மதிப்பீட்டில் பழையனூர் வல்லாரேந்தல் கிருதுமால் நதி குறுக்கே உயர் மட்ட பாலம் கட்டப்பட்டு கடந்த பல மாதங்களாக மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

இதனால் விருதுநகர், சிவகங்கை இரண்டு மாவட்டங்களைச் சேர்ந்த 12 கிராம மக்கள் தமிழக அரசுக்கு நன்றி தெரிவித்து வருகின்றனர்.



வேலூர் வடக்கு மாவட்டம் காட்பாடி காந்தி நகர் பகுதி தி.மு.க. அலுவலகத்தை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் , நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த் திறந்து வைத்தார். உடன்பகுதி செயலாளர் என்.பரமசிவம், மாவட்டப் பொருளாளர் சி.நரசிம்மன், வடக்கு பகுதி செயலாளர் வன்னியராஜா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சரவணன் , தேவதேவன், அரிகிருஷ்ணன், கெஜா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் இளையான்குடியில் நடைபெற்ற ‘தமிழ்நாடு தலைகுனியாது’ பரப்புரை கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் சிறப்புரை ஆற்றினார். மேடையில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், முன்னாள் எம்.எல்.ஏ. சுப.மதியரசன், முன்னாள் எம்.பி.க்கள் கோபாலகிருஷ்ணன், ஓ.பி.எஸ்.ரவீந்திரநாத் ஆகியோர் உள்ளனர்.

‘திராவிட மாடல்’ 2.0 ஆட்சியை மீண்டும் அரியணையில் அமர்த்திட

# நியாய விலைக்கடை பணியாளர்கள் களப் பணியாற்றுவோம்!

## தமிழ்நாடு கூட்டுறவு நியாய விலைக்கடை தொ.மு.ச.வின் மாநில - மாவட்ட நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, மார்ச் 24 - தமிழ்நாடு கூட்டுறவு நியாய விலைக்கடை தொ.மு.ச.வின் மாநில, மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் 22.03.2026 அன்று காலை தொ.மு.ச. பேரவை தலைமை அலுவலகமான கலைஞரகத்தில்” சங்கத் தலைவர் எஸ்.உமாகாந்தன் தலைமையில், சங்கப்பொதுச் செயலாளர் இரா.பொன்னுராம் வரவேற்புரையுடன் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளரும் சங்கத்தின் சிறப்புத் தலைவருமான மு.சண்முகம் எம்.பி. வாழ்த்துக்களுடன் பேரவைத் தலைவர் கி.நடராசன், பேரவைப் பொருளாளர் கோ. சி.வள்ளுவன், பேரவை இணைப் பொதுச் செயலாளர் ஜெ.விஜயகுமார், அலுவலகச் செயலாளர்கள் ஆ.சீ. அருணகிரி, ப.பன்னீர் செல்வம், செயலாளர் எம். சண்முகம், மொத்த விற்பனை பண்டகசாலை தொ.மு.ச. பொதுச்செயலாளர் சு.பத்மநாபன், சங்கத் தலைவர் து.பிச்சை மற்றும் சங்கத்தின் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர். சங்கப் பொருளாளர் ஜெ.வெங்கட்ராயலு நன்றி கூறினார்.

கூட்டத்தில் வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்கப் பொதுச் செயலாளர் சி.தணிகாசலம், நீதிராஜன், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் ஆர்.வில்சன், பிரதம பண்டகசாலை தொ.மு.ச. மகேந்திரன், திருமதி கெஜலட்சுமி, கூட்டுறவு நியாய விலைக்கடை தொ.மு.ச. மாநில நிர்வாகிகள் ஆர். கோபாலகிருஷ்ணன், வ.வே.மாணிக்கம், ஜி.செல்வம், இ.பிரபு, ஐ.முருகன், டி.யு.சி.எஸ். ராஜன் சாமிநாதன், திருமதி கே.லதா, திருநெல்வேலி எஸ்.கண்ணன், தூத்துக்குடி ஏ.வேல்முருகன், தென்காசி சரவணன், விருதுநகர் ராமச்சந்திரன், மதுரை செல்லபாண்டி, சேலம் எம்.செல்வராஜ், புதுக்கோட்டை எம்.சண்முகம், விழுப்புரம் ஸ்ரீதர், ராணிப்பேட்டை ரேணுகோபால், சென்னை நாம்கோ ஜெயச்சந்திரன், ரெட்டில்ஸ் செல்வகுமார், திருவள்ளூர் வி.அருண்குமார், தென்சென்னை என்.லட்சுமணன், டி.கருணாகரன், தங்கமாரியப்பன், ந.பக்தவத்சலம், காஞ்சிபுரம் கோவிந்தராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மா னங்கள் வருமாறு

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு நியாய விலைக் கடை பணியாளர்களுக்கு 5.3.2025 அன்று வரலாறு காணாத வகையில் 15 சதவிகிதம் ஊதிய உயர்வு அறிவித்த திராவிட மாடல் நாயகர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன், தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளர் மு.சண்முகம், பேரவைத் தலைவர் கி.நடராசன், பேரவைப் பொருளாளர் கோ.சி.வள்ளுவன் கூட்டுறவு நியாய விலைக்கடை தொ.மு.ச.வின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தலில் நமது கழகத் தலைவர் முதல்வர் அவர்கள் தலைமையிலான மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களின் வெற்றிக்கு களப் பணியாற்றுவதெனவும், நமது தலைவர் தளபதியின் இலக்கான வெல்வோம் 200 படைப்போம் வரலாறு” என்பதை அடைந்திடவும் தலைவர் தளபதியை மீண்டும் அரியணையில் அமர்த்திடவும் இக்கூட்டம் ஏகமனதாக தீர்மானிக்கிறது.

மொத்த விற்பனை பண்டகசாலை, தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம், தாலுகா வேளாண்மை கூட்டுறவு சங்கம், பிரதம பண்டகசாலை, மகளிர் சுயஉதவிக் குழு மற்றும் இதர அமைப்புகளால் நடத்தப்படும் நியாய விலைக்கடைகளை ஒரே அமைப்பின் கீழ் கொண்டு வரவும் ஏற்படுத்தி சம வேலைக்கு சம ஊதியம் என்ற அடிப்படையில் நுகர் பொருள் வாணிபக் கழகம் சார்பில் நடத்தப்படும் நியாய விலைக்கடை பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் மற்றும் பணப் பயன்களை அனைத்து நியாய விலைக்கடை பணியாளர்களுக்கும் வழங்க வேண்டும் என இக்கூட்டம் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம், தத்தனேரி ஊராட்சி, ஊசிமேசியாபுரம் கிராமத்தில் ரூ25 லட்சம் மதிப்பீட்டில் சமூக நலக்கூடம் கட்டுவதற்கான பணியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ.வி. மார்க்கண்டேயன் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்.நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் இம்மானுவேல், சின்னமாரிமுத்து, நவநீதகண்ணன், ராமசுப்பு, அன்புராஜன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆலங்குடி சிவ.பாலகிருஷ்ணன்
### மார்ச் 24 (2007)



தன்னுடைய இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழக பணியாற்ற தொடங்கியவர்.

ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டத்தில் ஆலங்குடி வட்டக் கழகத்தின் முதல் செயலாளராக பொறுப்பு வகித்து கழகம் வளர்த்தவர்.

பாச்சிக்கோட்டை ஊராட்சி மன்றத் தலைவராகவும் – புதுக்கோட்டை சமஸ்தான கோவில்களின் அறங்காவலர் குழு தலைவர், திருச்சி மாவட்ட நூலக ஆணைக்குழு துணைத் தலைவர், புதுக்கோட்டை அக்ரோ நிலவள வங்கி, மத்திய கூட்டுறவு வங்கி, வேளாண்மை கூட்டுறவு வங்கி ஆகியவற்றில் இயக்குநராகவும் பொறுப்பு வகித்தவர்.

1965 இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு ஆறு மாத சிறைவாசம் அனுபவித்ததோடு, கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**